

சென்னை, பெரியமேடு, ஈ.வே.ரா.பெரியார் நெடுஞ்சாலையில், நேற்று (14.05.2025) அரசு கவின் கலைக் கல்லூரியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு ஆகியோர் பதிப்போவியம், துகிலியல் பிரிவுகள் மற்றும் நூலகம் ஆகியவற்றிற்கு தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் 53,305 சதுர அடியில் ரூ.21.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி கவிதா ராமு, கலை பண்பாட்டுத் துறை இணை இயக்குநர் செல்வி. சி.கீதா, சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி முதல்வர் (பொ) தே.சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### செஞ்சி மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில்

# கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை!

செஞ்சி, மே 15-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி செஞ்சி மத்திய ஒன்றிய திமுக சார்பில் நாடு போற்றும் நான்லாண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் மழவந்தாங்கல்கலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன் தலைமை தாங்கினார் .ஒன்றிய நிர்வாகிகள் வாசு, செல்வமணி, பாண்டுரங்கன், சாரங்கபாணி,ஊராட்சி நிர்வாகிகள் திருமாவளவன், அண்ணாதுரை, கதிர்வேல், சிங்காரவேலு, சின்ன ராமு, அய்யாக்கண்ணு, பரசுராமன், ஆகிய முன்னிலை வகித்தனர்.

மாவட்ட பிரதிநிதி திருநாவுக்கரசு அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் தமிழ் கொண்டான், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு திமுக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்தினர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நான்கு ஆண்டு காலத்தில் அனைத்து துறைகளும் வளர்ச்சி அடைந்துள்ளது. அந்த வகையில் விவசாயிகளுக்கு தனி நிதி நிலை அறிக்கையை உருவாக்கி அவர்களுக்கு வேளாண் சார்ந்த உபகரண பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது . மேலும் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.நெல்லுக்கு அதிக விலை கொடுக்க மோடி மறுக்கிறார். தமிழ்நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு நெல்லுக்கு நல்ல விலையை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்குகிறார். விவசாயிகள் நலனில் அக்கறை உள்ள தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செய்து வருகிறார். ஆனால் விவசாயிகளை வஞ்சின்ற பிரதமர் மோடியுடன் எடப்பாடி பழனிச்சாமி கூட்டணி வைத்து இன்று தமிழ்நாட்டுக்கும் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் துரோகம் செய்து வருகிறார்.

டாக்டர் கலைஞர் ஆட்சியிலும், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சியிலும் தமிழ்நாட்டில் நீட் தேர்வை கொண்டு வரவில்லை ஆனால் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சர் ஆனவுடன் நீட் தேர்வை தமிழ்நாட்டில் கொண்டு வந்தார் ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நீட் தேர்வு ரத்து செய்ய வேண்டும் என தொடர்ந்து போராடி வருகிறார்.தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் மக்களுக்காக ஆட்சியை நடத்தி வருகிறார் ஆனால்தமிழ்நாட்டு மக்களுக்காக கொடுக்க வேண்டிய நிதியை பிரதமர் மோடி வழங்க மறுத்து வருகிறார்.

கல்வி சுகாதாரத் துறைக்கு நிதி ஒதுக்க வில்லை தமிழ்நாட்டில் உரிமையை பறிக்கின்றார். தமிழ்நாட்டின் உரிமை பறிக்கின்ற ,தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கிற பிரதமர் மோடியுடன்எடப்பாடி பழனிச்சாமி கூட்டணி வைத்துள்ளார். நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ள அதிமுகஎடப்பாடி பழனிச்சாமி கூட்டணி கட்சிகள் தமிழ்நாட்டில் டெபாசிட் கூட பெற மாட்டார்கள் என தெரிவித்த மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தமிழ்நாட்டின் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் இல்லங்களிலும் முதல்வரின் திட்டங்கள் சென்று சேர்ந்துள்ளது ஒவ்வொரு இல்லங்களிலும் ஒவ்வொரு உள்ளங்களிலும் ஸ்டாலின் அவர்களின் குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் 2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதியிலும் தி.மு.க. வெற்றி பெற்று மீண்டும் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராவது உறுதியென அவர் உறுதிபட தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜய குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சிவப்பிரகாசம், மாவட்ட பிரதிநிதிகள் கதிரவன், அய்யாதுரை,ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அரவிந்த ராஜ், மழவந்தாங்கல் கிளைக் கழக நிர்வாகி கள்சிவானந்தம், அன்பரசன், சுப்பிரமணி,

வேலாயுதம், கே.ஆறு முகம், இ.ஆறுமுகம், சுப்ரமணியன், ராஜகோபால், சங்கர், சக்கரவர்த்தி, வேலுச்சாமி, பாவாடை, ரமணி, ரங்கநாதன், தங்கவேல், நாராயணன், சேகர்,சிங்காரவேல், மணிவண்ணன், கார்த்தி, சிதம்பரம், ஜெயக்குமார்,ஸ்ரீதர், விவேகானந்தன், மணி, கதிர்வேல், துரைகன்னு, முனுசாமி, சின்னத்தம்பி, அரிபுத்திரி உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள். திமுக நிர்வாகிகள் மற்றும்கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர். கிளைக் கழக செயலாளர் முருகன் நன்றி கூறினார்.

### ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமை!

# சங்கரன் கோயிலில் மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### ஹெலன் டேவிட்சன், நாமக்கல் ராணி சிறப்புரை!

தென்காசி, மே15-

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி,மகளிர் தொண்டரணி ஒன்றிய,நகர, பேரூர், நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் மகளிர் பாக முகவர்கள் ஆலோசனை மற்றும் பாசறை கூட்டம் சங்கரன் கோவிலில் இன்று (15.05. 2025 வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் சீதாலட்சுமி திருமண மஹாலில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் மகளிர் அணி நிர்வாகிகள் அன்புமணி கணேசன், அண்ணாமலை, செல்வி, கவிதா, கிருஷ்ணலீலா,சுதா, லாவண்யா, பொன்னுத்துரைச்சி,கற்பகம், உமா மகேஸ்வரி, லைலா பானு, அன்னலட்சுமி,புஷ்பவல்லி,ராமலட்சுமி, தமிழ்ச்செல்வி,விஜயலட்சுமி, பிரபாபதி, உமாதேவி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஊராட்சி மன்ற தலைவர் வே.சிவசங்கரி வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி,

தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார்,மாநில மகளிர் அணி தலைவர்,செயலாளர் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் விஜயா தயான்பன்,மாநில மகளிர் அணி இணை செயலாளர்,தலைவர் தமிழ்நாடு மகளிர் ஆணையம் குமரி விஜயகுமார், மாநில மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார்,

மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த் உள்பட தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் மகளிர் அணி,மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் விஜயா செளந்தரபாண்டியன் நன்றியுரை யாற்றுகிறார்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதி தடுத்தலான் கோட்டை வழியாக வீரசோழனுக்கு மானாமதுரை பேருந்து நிலையத்திலிருந்து பார்த்திபனூர் பேருந்து நிலையம் வழியாக பிடாரிசேரி தடுத்தலான்கோட்டை வழியாக வீரசோழன் வரை செல்லும் புதிய பேருந்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் கொடியைசைத்து துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் பரமக்குடி கிளை மேலாளர் ரத்தினம், சிவகங்கை கிளை மேலாளர் ஹரி வர்ஷன், பரமக்குடி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் சேதுபதி மற்றும் காளிதாஸ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் முத்துராமன்,மோகன், மலைச்சாமி, மாவட்ட பிரதிநிதி வேலாயுதம், ராஜா, கழக நிர்வாகிகள் பாலா, முகமது அலி மற்றும் கிளைக் கழக செயலாளராக பிரதிநிதிகள் கிராம பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் "நான் முதல்வன் "திட்டத்தின் ஒரு அங்கமான கல்லூரி கனவு" என்ற திட்டத்தை காணொளி காட்சி மூலமாக துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் , விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரியில் நடைபெற்றது நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்எல்ஏ கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மாவட்ட ஆட்சியர் சேக் அப்துல் ரகுமான் , விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன் மாவட்டக் கழக பொருளாளர் இரா.ஜனகராஜ் , முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பீ.ஆர்.கவாய் பதவி ஏற்பு!

புதுடெல்லி, மே 15-

மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த நீதிபதி பீ.ஆர். கவாய் 1985 ஆம் ஆண்டு மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் பணியை தொடங்கினார். 2003ம் ஆண்டு மும்பை உயர் நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 2005ம் ஆண்டு நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர், 2019ம் ஆண்டு உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள பீ.ஆர். கவாய் வரும் நவம்பர் 23ம் தேதிவரை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகிப்பார். கே.ஜி.பாலகிருஷ்ணனுக்கு பிறகு இந்தியாவின் தலைமை நீதிபதி



பதவியில் அமரும் 2வது தலித் நீதிபதி B.R.கவாய் என்பது குறிப்பிடத்தக்கது.

### அரியலூர் மாவட்டத்தில் ரூ.77.80 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

# ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் 13 புதிய திட்டப் பணிகள்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

அரியலூர்,மே,,15-

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் ரூ.77.80 இலட்சம் மதிப்பீட்டில் 05 முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் 13 புதிய திட்டப்பணி களை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, கலந்து கொண்டார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் கிராம ஊராட்சிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகளை மேம்படுத்துதல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராம ஊராட்சிகளில் ரூ.77.80 இலட்சம் மதிப்பீட்டில் 05 முடிவுற்ற திட்டப்பணிகளும், ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் 13 புதிய திட்டப்பணி களும் என மொத்தம் ரூ.1.81 கோடி மதிப்பீட்டிலான பணிகளை தொடங்கி வைத்தார்.

அதன்படி செந்துறை ஊராட்சி ஒன்றியம், பாளையக்குடி ஊராட்சி, கிளிமங்கலம் கிராமத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் பிடாரி குளம் புனரமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார். தொடர்ந்து கிளிமங்கலம் கிராமத்தில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலை கட்டடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து முதல் விற்பனையினை தொடங்கி வைத்தார்.

பின்னர், கிளிமங்கலம் கிராமத்தில் ரூ.10.90 இலட்சம் மதிப்பீட்டில் பெரிய ஏரி புனரமைக்கும் பணியினையும், தொடர்ந்து பாளையக்குடி ஊராட்சியில் ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் பெரிய ஏரி புனரமைக்கும் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை விரைவாக முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, வடக்கு இரும்புலிக்குறிச்சி ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலை கட்டடத்தினையும், பின்னர், தெற்கு இரும்புலிக்குறிச்சி ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலை கட்டடத்தினையும் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பொருட்களை வழங்கி முதல் விற்பனை யினை தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, குமிழியம் ஊராட்சியில் ரூ.16.45 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டடம் கட்டும் பணியினை துவக்கி வைத்து, பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு, உரிய காலத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து குமிழியம் ஊராட்சியில் ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

பின்னர், குமிழியம் ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலை கட்டடத்தினையும் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பொருட்களை வழங்கி முதல் விற்பனையினை தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து வீராக்கன் ஊராட்சியில் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் கிழக்கு கடந்தைப் பட்டி ஆதிதிராவிடர் பகுதி மயானக் கொட்டகை அமைக்கும் பணிகளையும், பின்னர், வீராக்கன் ஊராட்சியில் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் தெருவில் இருபுறமும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, கீழமாளிகை ஊராட்சி, வடக்கு தெருவில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், பின்னர், மத்துமடக்கி கிராமத்தில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினையும், தொடர்ந்து, மத்துமடக்கி வடக்கு தெருவில் ரூ.7.86 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணயினையும், பின்னர், கீழமாளிகை ஆதிதிராவிடர் தெருவில் ரூ.9.87 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், தொடர்ந்து, கீழமாளிகை பெரிய ஏரியில் ரூ.11.57 இலட்சம் மதிப்பீட்டில் ஏரி ஆழப்படுத்துதல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல் பணிகளையும்,

பின்னர், கீழமாளிகையில் ரூ.9.21 இலட்சம் மதிப்பீட்டில் கதிரடிக்கும் களம் அமைக்கும் பணிகளையும், தொடர்ந்து கீழமாளிகை ஆதிதிராவிடர் பகுதியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்து, பணிகளை உரிய காலத்திற்குள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன், கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் எம். உமா மகேஸ்வரி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, செந்துறை வட்டாட்சியர் வேலுமணி, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட பிரதிநிதி காளமேகம், ஒன்றிய துணை செயலாளர் அன்பரசி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் இராமாராஜன், செல்வம், தர்மராஜ், கழக நிர்வாகிகள் ரமணி, ஆனந்த், சுந்தர், கழக வழக்கறிஞர் ஆர்.சசிகுமார், அரசு அலுவலர்கள், பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் வடக்கு ஒன்றிய சார்பில், கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் சில்வார்பட்டியில் வடக்கு ஒன்றிய செயலாளர் எல் எம் பாண்டியன். தலைமையில் நடைபெற்றது சில்வார்பட்டி மேற்கு கிளை பொறுப்பாளர் தங்கவேல் வரவேற்பு உரை ஆற்றினார். வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல் மூக்கையா. சரவணகுமார் எம்எல்ஏ . தலைமை கழக பேச்சாளர் மரியராஜ். பழனி அப்பாஸ் கச்சேரி. பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம். ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள் மாவட்ட அவைத் தலைவர் பி டி செல்ல பாண்டியன்.பெரியகுளம் ஒன்றிய குழு தலைவர் தங்கவேல்.பேரூராட்சி தலைவர் நடேசன். மாநில மீனவர் நல வாரிய உறுப்பினர் முருகன் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் முருக பாண்டி. நன்றி உரையாற்றினார் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.